# இதற்குப் பரிசு ரூபாய் 50!!


# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

25-8-61 (வெள்ளி) விலை 16 காசு





## கண்டு எழுதுங்கள்

கேலிச்சித்திரம் எழுதிவரச் சொன்னதற்கு நமது ஓவியர் தலை "காலி"யாயுள்ள சித்திரம் வரைந்து விட்டார்.

"என்னய்யா இது?" என்று கேட்டால், "தமிழ்நாட்டு அரசியலிலுள்ள ஒரு விசித்திரமான பகுதி இதில் புதைந்து கிடக்கிறது" என்று எம்மிடம் வாதிடுகிறார்.

அந்தப்பகுதி எது, தலைக்குரியவர்கள் யார், என்று கண்டுபிடிக்கும் வேலையை அறப்போர் வாசகர்களுக்கே அளிக்கிறோம்! ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் இதனை விளக்கி கட்டுரையாக எழுதி அனுப்பலாம். முடிவு தேதி 8-9-61.

நடுநிலைமையாளர்கள் தேர்ந்தெடுக்கும் கட்டுரைக்கு அறப்போரின் சார்பில் ரூ. 50 பரிசளிக்கப்படும். 17-9-61 வெளிவரும் 'அறப்போர்' தி.மு. கழக மலரில் அந்தக் கட்டுரை வெளியிடப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் 'முதல் தரமானவை' என்று தேர்ந்தெடுக்கப்படின், சீட்டுக்குலுக்கிப்போட்டு பரிசுக்குரியது நிர்ணயிக்கப்படும். மற்றவை அறப்போரில் வெளியிடப்படும்.

கட்டுரை அனுப்புவோர், எந்தவிதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது.

பொறுப்பாளர் - படவிளக்கக் கட்டுரைப்போட்டி, அறப்போர் சென்னை-24. என்று தெளிவாக முகவரி எழுதி அனுப்ப வேண்டும்.

- ஆசிரியர்.

நமது போராட்டம், ஒரு முறையை எதிர்த்து; நேரு பண்டிதரை அல்ல.

# ஏசுவோரும் வாழ்த்துவர்!

நேரு பண்டிதர் தமது ஆற்றலை எந்த முறைக்குப் பக்கபலமாக்கிக் காப்பாற்றி வருகிறாரோ, அந்த முறை மீது நமக்கு வெறுப்பு; அதைக் கண்டிக்கிறோம்; எதிர்க்கிறோம்; கிளர்ச்சி நடத்துகிறோம்; நேரு பண்டிதரெனும் தனி மனிதரிடம், மதிப்புக் குறைவுமில்லை; அவரை மட்டமாக மதிப்பிட நாம் மதியிலியும் அல்ல. மாறாக நேரு பண்டிதரின், விடுதலை ஆர்வம், நமக்கு அவரிடம் பெரு மதிப்பை ஏற்படுத்துகிறது; ஆனால் அதனினும் அதிக அளவு மதிப்பு விடுதலை ஆர்வத்தின் மீது ஏற்படுகிறது!

முன் ஏர் போனபடி பின் ஏர் போகிறது—என்பார்கள் அல்லவா? அதுபோல, முன்பு, வெள்ளை வெறியர் பேசியதை இன்று காங்கிரஸ் கண்ணியவான்கள் பேசுகின்றனர். இதைப் புரிந்துகொண்டால், தம்பி! நமக்குக் காங்கிரசாரிடம கோபம் எழாது; மாறாக, அவர்களே உணரும் வண்ணம், நாம் நமது இலட்சியத்துக்காகப் பாடுபட வேண்டும்; இன்னல்கள் அடுக்கடுக்காக வந்தாலும், தளரக்கூடாது; இன்னுயிர் போவதேனும் இலட்சியத்தை இழக்கக்கூடாது என்ற உறுதியை, எழுச்சியைப் பெற வேண்டும் என்று தோன்றும். தர வேண்டிய விலை கொடுத்துப், பெற வேண்டிய விடுதலையைப் பெற்றுக் காட்டினால், இன்று ஏசுவோரின் கண்ணீர் நம்மை வாழ்த்தும் நிலையில் வழியும்!



பர்மிட் பெறத் துணை நின்றார்! பஸ் ரூட் வாங்கிக் கொடுத்தார்! பஞ்ச நிவாரணக் கடை கிடைக்கச் செய்தார்! ஏரி மராமத்துக் காண்ட்ராக்ட் எடுத்துக் கொடுத்தார்! பால் பவுடர் தந்தார்! மந்திரி பக்கத்தில் உட்கார வைத்தார்! பெரியப்பாவிடம் உயிர்! பெரிய தனக்காரருக்கு நண்பர்! சத்திரம் ஆறு! சமாராதனை வருடா வருடம்! ஜாதியில் பெரியவர்! ஊரில் பாதி அவருடையது! கடன் கொடுப்பவர் அவரேதான்! கலெக்டர் மகனுக்குப் பெண் தந்தார்!—எனும் இப்படி ஏதாகிலும் காரணங்களுக்காகப், பெரும்பாலான காங்கிரசாருக்கு, ஆதரவு—தேர்தல் காலத்தில்தரப்படுகிறதேயன்றி, இவர்கள். விடுதலை வாங்கித் தந்தவர்கள்! வீரதீரச் செயலாற்றியவர்கள்! என்று எண்ணி அல்ல. மக்கள், இத்தனை விவரமாகப் பேசமாட்டார்களே தவிர, அவர்கள் விவரம் அறியாதவர்கள் அல்ல!!

மாட்டின் கழுத்திலே கட்டப்பட்ட மணியைக் கொண்டு மாட்டின் விலையை மதிக்க மாட்டார்கள்; அங்கிலையில் மாட்டின் கழுத்து மடிப்பில் ஒட்டிக் கொண்டு கிடக்கும் 'உண்ணி'யைக் காட்டி, பத்து ரூபாய் சேர்த்துக் கொடு என்று மாட்டுக்குடையான் கேட்டால், கைகொட்டியல்லவா நகைப்பார்கள்! அதுபோலக், காங்கிரசுக்குக் கிடைத்துள்ள பதவியைக் கண்டே, மயங்க மறுக்கும்போது, ஒட்டிக்கொண்டுள்ள உண்ணி போல, ஆளும் கட்சியாகக் காங்கிரஸ் மாறின பிறகு, அதிலே குடிபுகுந்த குணாளர்களைக் கண்டா, மருளப் போகிறோம்? அவர்களுக்குப் பாபம் அப்படி ஒரு நினைப்பு

வெள்ளையரை, நேரு போன்றோர் எதிர்த்தபோது அவர்களிடம் இருந்து வந்த ஆயுதம் என்ன? திடமான நம்பிக்கை, அசைக்கமுடியாத ஆர்வம்! எதையும் தாங்கும் உள்ளம்! வேறு உண்டோ? சொத்து நிரம்ப இருந்தது அவர்களிடம் — நம்மைப்போல் நடுத்தெரு நாராயணர்கள் அல்ல, அந்த நாள் காங்கிரசார்! இன்று காங்கிரசார் ஆகிவிட்டவர்கள் போல, ஊரை அடித்து உலையிலே போடவேண்டிய நிலையினரும் அல்ல. பூர்வீகச் சொத்து! நல்ல வருவாய்! சமூகத்திலே மேலிடம்! படிப்பு! பதவி!—எல்லாம் இருந்தது.

தம்பி! என்றாவது ஒரு நாள் முதன் முதல் காங்கிரசை நடத்த முன்வந்தவர்கள் எவரெவர், அவர்களின் செல்வ நிலை, சமூக நிலை என்ன என்பதோடு, வெட்ட வெளியில் கொட்டும் மழையில் கூடி, தி. மு. கழகம் துவக்கினோமே, அவர்களுடைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார், உனக்கே வியப்பாக இருக்கும்! நாமா, இப்படி ஒரு இயக்கத்தை கட்டிக்காப்பாற்றி வரமுடிகிறது, என்று.

**அறிஞர் அண்ணா**

# நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

- 4 -

மதுரைக் கருப்புச் சட்டைப் படை மாநாடு முடிந்த சில வாரங்களுக்கெல்லாம் குடந்தையில கோலாகலமாக திராவிடர் கழக மாநாடு நடந்தது. அதற்குச்சென்றிருந்த பெரியார் அவர்கள் தோழியர் மணியம்மையுடன் இரயிலில் வந்திறங்கினார்கள். ஈரோடு இரயிலடிக்கு நானும் தோழர் என். இ. பாலகுரு எனும் தோழரும் போயிருந்ததோம். வீட்டுக்கு வந்ததும் அய்யா அவர்களை மிகவும் ஆவலோடு "மாநாடு எல்லாம் எப்படிங்க இருந்தது?" என்று கேட்டேன்.

"எப்படி இருந்துச்சா! என் ஆத்திரம் தீரும்படி நல்லா திட்டிப் போட்டேன், குள்ளநரிங்கன்னு கூடச் சொன்னேன். அவன் தான் (அண்ணா) கருப்புச் சட்டைப் போடலேன்னா இந்தச் சின்னதம்பிக்கு என்னங்ககேடு? திட்டு திட்டென்று திட்டிவிட்டேன்" என்றார்.

நான் கேட்டது மாநாடுபற்றி! அய்யா பதில் சொன்னதோ, அண்ணாவைப்பற்றி!! குடந்தை வி. சின்னதம்பியவர்களைத் தான், திட்டு திட்டென்று திட்டி விட்டதாக அய்யா தெரிவித்தார்கள். அய்யா அவர்கள் திட்டியதோ, கோபிப்பதோ கூடாத காரியமல்ல. ஆனால் "கழகத்தை விட்டுஓடுங்க!" என்றும், "குள்ள நரிங்களா!" என்றும் தான் கூறியதாகச் சொன்னதைக் கேட்டபோது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். பாரதிதாசன் அதிர்ச்சி முன்பு! இப்போது அண்ணாவின்மீது அய்யாவுக்கிள்ள ஆத்திரம் கண்டு, மேலும் அதிர்ச்சி!!

பெரியார் அவர்களின் இல்லத்தைவிட்டுநானும் தோழர் பாலகுருவும்திகிலடைந்தவர்களாகவே கிளம்பினோம். இதைப் பற்றி ஈரோடு சண்முகவேலாயுதம் என்பவரிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது, அவர் அய்யாவின் போக்குபற்றி இன்னும் என்னென்னவோ சொல்லலானார்.

மொத்தத்தில் ஈரோட்டு வாசம் எனக்குப் பலவிதமான எண்ணங்களை உண்டாக்கியது! மாணவத் தலைவர் தோழர் தவமணிராசனிடம், "என்னடா! இப்படியெல்லாம் கழகம் போகிறதே!!" என்றால் "இந்தக் கிழவன் இப்படி தாண்டா! சரி, விடு!! என்று ஏக வசனத்தில் பேசிவிட்டுப் போய் விடுவார். இந்தச் சூழ்நிலையில் சென்னையில் 'விடுதலை' நாளிதழை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய தோழர் திராவிடமணியும் சென்னைக்குப் போய் விட்டார். திடீரென எனக்கு அம்மை கண்டது! இப்போது நினைத்தாலும் பயங்கரமாயிருக்கிறது. 'குடியரசு' அலுவலகத்தின் ஓரத்திலுள்ள ஒரு அறையில் படுத்திருந்தேன். சம்பத்துடைய இளவல் ஈ. வெ. கி. செல்வன் எனக்கு அப்போது எவ்வளவோ உதவினார்.

'குடியரசு' நிர்வாகியாயிருந்த கரிவரதசாமி எனும் பெரியவர், "இளநீரா! பழமா! என்ன வேண்டும்?" என்று உதவுவார்! அவருடைய திருமகனார் எதுராசு இனிய நண்பர் ஆர். டி. முத்து சுப்பையா, அபிபுல்லா, லூர்து சாமி இப்படி கழகத்தின் மூலம் நான் தொடர்பு பெற்ற ஒவ்வொருவரும் உதவினார்கள்!

தோழியர் மணியம்மை காட்டிய அன்பையும் பரிவையும் நான் இன்னும் மறந்துவிடவில்லை! ஆனால் யாருக்காகஉயிர்போவதுகூட இன்பமானது என்று நான் இதயத்தில் எண்ணியிருந்தேனோ, அந்தப் பெரியார் அவர்கள்...!! அவரை நம்பி அறியாத ஊருக்கு போயிருந்த என்னை வீதியிலிருந்தபடியாவது விசாரித்திருக்கலாம்..

பள்ளியிறுதி வகுப்பில் தேறிய நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் புகுந்தேன். அங்கு படிக்கப் புகுந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் சென்னையில் புரட்சிக் கவிஞருக்குப் பணமுடிப்பு அளிக்கும் விழா நடந்தது. தோழர் இரா. இளம்வழுதி அவர்களும் மாணவர்கள் பலருமாக அந்த விழாவில் கலந்து கொண்டோம். கவியரசருக்குப் பணமுடிப்பினை வழங்கி அண்ணா அவர்கள் பேசிய பேச்சு என்னை மிக மிகக் கவர்ந்தது. புலமையும் அருமையும் இருந்தும் ஏனையோரெல்லாம் புரட்சிக் கவிஞரின் 'தமிழை' மறுத்த நேரம், அது. அவரை ஒரு கவிஞர் என்று ஒப்புக் கொள்வதுகூடப் 'பாபம்' என்று எழுத்துலக வல்லாளர்கள் எண்ணியிருந்த சமயம். அப்போது அளிக்கப்பட்ட கால் லட்சத்துக்கு மேற்பட்ட ரூபாய் கவிஞருடைய செலவுக்குப்பயன்பட்டிருக்கலாம்! ஆனால் அந்த பணமுடிப்பு மூலம் தமிழ் கூறு நல்லுலகம், மூடிய கண்ணைக் கொஞ்சம் விழித்து வியப்போடு பார்த்தது!!

தமிழுக்குப் புதுமை தருவோரை—புதுக் கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்பதால் ஆதரிக்க மறுப்போருக்கு 'சவால்' விடுவதுபோல அந்த பாராட்டு விழா அமைந்தது. கவியரசரின் கவிதைகளில் மாற்றாருக்குக்கூட கவனமும் கருத்தும் செல்லுமளவுக்குச் செய்தது அந்த 'பணமுடிப்பு விழா' என்பது மிகையல்ல!!

இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறுவகைகளில் பாடுபடும் விற்பன்னர்களை மதிக்கவும் கவுரவிக்கவும் வேண்டும் என்கிற அவாவும் வேட்கையும் அரும்பச் செய்தவிழாஎனலாம். அதனைஒரு வகையில் திராவிடரியக்கத்தில் ஜனநாயகஉணர்ச்சிஉருவெடுக்க நடத்தப்பட்ட கால்கோள் விழா எனவும் கூறலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக வாழ்வு முதலாண்டு நுழைவோடு எனக்கு முடிந்தது. தேர்ச்சிபெறவில்லை நான். தொடர்ந்து மீண்டும்படிக்க இடமும் மறுக்கப்பட்ட நிலையில் விரக்தியடைந்தேன். இடம் கிடைக்குமா என்று வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரிக் கூடப் போய் திரும்பினேன். படிக்க வேண்டும் என்கிற தாகம் கொண்ட என் வாழ்க்கையில், ஒரு திருப்பம் ஏற்பட்டது. அப்போது சென்னையில் "முஸ்லீம்" என்கிற தினசரி ஒன்று நடந்து கொண்டிருந்தது. முஸ்லீம் லீக் தலைவர் முகம்மது இசுமாயில் அவர்களின் தம்பி அகமது இபுராகீம் பி. ஏ. பி. எல். எனும் பெரியார் அந்த ஏட்டுக்கு ஆசிரியராயிருந்தார். இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகவுமிருந்தார் அவர். அலுவலகத்தில் பணியாற்றிய என் நண்பர் ஒருவர், அந்த ஏட்டில் துணை ஆசிரியப் பதவிகாலியாக யிருப்பதாகவும், ஆசிரியருக்கு எழுதும்படியும் சொன்னார்.

தினசரி அலுவலகங்களில் துணை ஆசிரியர் பதவியென்பது இலக்கியப்பணியல்ல மிகவும் கடுமையாகவும் திறமையாகவும் செய்ய வேண்டிய மொழிபெயர்ப்பு வேலையாகும். எங்கே கிடைக்கப்போகிறது என்கிற ஐயத்துடனேயே ஒரு கடிதம் எழுதினேன்.

"உங்கள் கடிதம் பெற்றேன். உடன் வருக" என்று அழைப்பு வந்தது. என்னுடைய தமிழ் நடையைக் கண்டு மகிழ்வதாகச் சொல்லி உடனே 'உத்தியோகமும்' தந்தார் முஸ்லீம் ஆசிரியர்!

சென்னை மவுண்ட்ரோடிலுள்ள மாதாகோவிலுக்கருகில் அப்போது அதன் அலுவலகம் இருந்தது. ஒரு பக்கம் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் நடத்திய 'லிபரேட்டர்' எனும் ஆங்கில தினசரி ஏட்டின் அலுவலகம் இருந்தது. அதன் ஓரத்தில் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் "குயில்" கவிதை ஏட்டை துவங்கியிருந்தார்கள். அந்தச் சமயம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இன்னொரு முசுலீம் பெரியவர்நடத்திய 'சுதந்திர நாடு' எனும் தினசரி ஏட்டில் உதவி ஆசிரியராகயிருந்தார்கள். அந்த ஏடுஇராயபுரத்திலிருந்தது.

ஓராண்டுக் காலம் கழிந்த நிலையில் "விடுதலை" ஏடு பெரிய தாக்கப்படவே நான் கூப்பிடப்பட்டேன்! அண்ணன் குருசாமி அவர்களும், பண்புமிக்க நண்பர் பூ. கணேசன் எம். ஏ. அவர்க்ளும் அப்போது பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

முசுலிமிலிருந்தபோது, கழகத் தொடர்பும், கழக நண்பர்களுடைய உறவும், சுருங்குகின்ற சூழ்நிலை. அதைவிட்டு'விடுதலை'க்குப் போகிறோம் என்றதும் கானம்பாடும் வானம்பாடியானேன்!

'என்னை அனுமதிக்க வேண்டும்' என்று அகமது இபுராகீம் எனும் பெரியவரிடம் சொன்ன போது, "தம்பீ! உன் விருப்பம் அதுவானால் போ, ஆனால் ஒன்று, நீ எப்போது வரவிரும்பினாலும் இந்த ஆபீஸ் கதவுகள் உனக்கு வழிவிடும்" என்றுகூறிய அந்த

(11-ம் பக்கம் பார்க்க

எங்கும் ஒரே இருள், எப்பக்க மும் அலைபொங்கும் கடல் நீரன்றி வேறென்றுமே விழிகளுக்குத் தெரியவில்லை.

நிர்மலமயமான கருத்த ஆகாயத்தில் இறைந்து கிடந்த சிறு சிறு விண்மீன்கள் பளிச்பளிச் சென்று மின்னிக் கொண்டிருந்தன.

நீர்மட்டத்தின் மேலே தலை நீட்டிக்கொண்டிருக்கும் செவ்வல்லிப் பூவின் அலராத மொட்டினைப் போல் கடல் பரப்பின் வெகுதூர விளிம்புக்கப்பால் அரை மதி, தன் தலையை நீட்டியது.

**கூரான கத்தி! - இருந்தாலும்**
**இரும்பை வெட்ட முடியாது!!**
**உருவாக்கிய சக்கரத்திடம்**
**மோதும் மண்குடம், உடைந்து**
**சிதறுமே ஒழிய, சக்கரம்**
**நாசமாகாது!!**

ருேடு ஒன்ருய் ஐக்கியமாய் அலை ஓசையை வென்று ஒலித்தது.

"நல்லவர்களைப்போல் நடித்து, நச்சு எண்ணத்தை உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தவர்களின் உண்மையான ரூபம் இப்போது தான் புலப்பட்டது! கூட்டத்திலிருந்த ஒருவன் வெறுப்பு இழையோடும் குரலால் முழங்கினுன்.

மௌனமாக தலை அசைத்த கப்பல் தலைவன் சிறிது நிதானித்து, "தம்பி, இருட்டிலே மறைந்துகிடக்கும் கருப்பான பொருள் விடிந்ததும் பளிச்

# நியாயத்தின் முடிவு

கொந்தளிக்கும் அலைகளின் சுழற்சியிலே அந்தக் கலம் அசைந்து, அசைந்து சென்று கொண்டிருந்தது.

கப்பல் தலைவன், அந்தப் பனி இரவிலும் அவன் சுடர் முகத்தில் அரும்பித்துளிர்த்த வியர்வையை ஒரு முறை துடைத்து விட்டுக் கொண்டான்.

"கரை சேர இன்னும் எத்தனை நாளாகும்?" கப்பலோட்டியின் அருகிலே அமர்ந்திருந்த ஒருவன் ஒரு வினவை ஐயத்திலே தோய்த்து வெளியிட்டான்.

"கரை சேர இத்தனை நாளாகும்" என்று நாம் நாளை கணித்துக்கொண்டா பயணத்தைத் துவங்கினேம்? இல்லை...இல்லை... கரை சேர வேண்டும் என்பது நம் இலட்சியம். நம்முடைய நெடும் பயணத்தின் முடிவு எப்போது ஏற்படும் என்பதை யாராலும் உறுதிப் படுத்தவே முடியாது!" உலர்ந்துபோன அதரங்களின் பிளவிலே புன்னகை நெளிந்தோட, கப்பலோட்டி வினவை எழுப்பிய தோழனைப் பார்த்து கூறினுன்.

கும்பலில் மற்றொருவன் திடீரென்று கப்பலோட்டிய தலைவனைப் பார்த்துக் கேட்டான் பதைபதைக்கும் குரலில்.

"போய்வந்த இடத்திற்கு நாம் போகவில்லையே; பாதையை எளிதாக கண்டுகொண்டு நாம் போக!"—

"ஒரு புதிய இடத்தையல்லவா நாம் கண்டுபிடிக்கப் போகின்ரேம்! எப்போது நாம் அங்கு போவோம்? என்பதெல்லாம் நாம் மேற்கொள்ளும் தளராத உண்மையான உழைப்பின் இடையிலேதான் பொதிந்துள்ளது தம்பி!"

நெற்றியில் அரும்பி வளைந்த புருவக்கோட்டின் மீது வழிந்த வியர்வை நீரை துடைத்தபடிக் கப்பலோட்டி பேசிமுடித்தான்.

வினவை எழுப்பிய இரண்டு பேர்களும் முணுமுணுத்தனர். நாங்கள் போகிறோம் கரைக்கு என்று ஒரு படகை எடுத்துக் கொண்டு இறங்கினர். யாரும் தடுக்கவில்லை.

நீரைக் கிழித்துக்கொண்டு கப்பல் சென்று கொண்டிருந்தது! போனவர்களை எண்ணி தன் பயணத்தை நிறுத்தவா முடியும்!!

கொள்கைத் திறனற்றவர்கள் அங்குமிங்கும் நிலையின்றி அலைவதுபோல்—உறுதியற்ற வெண் மேகச்சிதறல்கள் வான அரங்கில் இங்குமங்கும் பாய்ந்து கொண்டிருந்தன.

*　　　*　　　*

கடலில் வீசிய பனிக்காற்ருல் கப்பலிலுள்ளவர்களின் உடலெல்லாம் நடுங்கியது; ஆனுல் அவர்களின் உள்ளம் மட்டும் நடுங்கவில்லை என்பதை—அவர்கள் கப்பலை செலுத்தக் காட்டிய ஆர்வம் பிரதிபலித்தது!

"என்ன தம்பி, சிந்தனை?"

கப்பலோட்டி, அவனைச் சுற்றி அமர்ந்திருந்த கூட்டத்தில்,

**பத்மா**

மௌனமாக அமர்ந்திருந்த ஒருவனைப் பார்த்து வினவைத் தொடுத்தான்.

அமைதி கொஞ்சும் முகத்தோடு அமர்ந்திருந்த அந்த மனிதன்—கப்பல் தலைவனின் வினவால் சிந்தனையினின்று விடுபட்டு

"ஒன்றுமில்லை தலைவா, சில தினங்களுக்கு முன் நம்மையும், நம் பயணத்தையும், நம் பயணத்தின் குறிக்கோளையும் எள்ளி நகையாடிவிட்டு—இந்தப் பெரும் ஆழியில் சிறு கலத்திலே ஏறிச் சென்ருர்களே, அவர்களின் பரிதாப நிலையை எண்ணிக்கொண்டிருக்கின்றேன்! வேறென்றுமில்லை"

அவனின் உரையிலே—பிரிந்து சென்றவர்களுக்காக அவன் காட்டும் அனுதாபமும்--கொண்ட கொள்கையிலே அவன் வைத்திருந்த அறுதியான உறுதியும் ஒன்ருேடொன்ருய் பின்னிப் பிணைந்திருந்தன.

"ஆமாம் தம்பி, எனக்கும் சில நேரங்களில் அவர்களைப் பற்றி நினைவு தோன்றுவதுண்டு, என்ன செய்வது? நெடும் பயணத்தைத் துவங்கிவிட்டப் பின்—இடையிலேயே முடிவைக் காண அவசரப் பட்டவர்கள் அவர்கள். அவர்கள், சிந்தனையை சலசலப்பினுள்ளே புதைத்துவிட்டு அவசரத்திற்குப் பலியாகிவிட்டவர்கள்"

சரிந்து வீழ்ந்த போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு தலைவன் உரைத்தான்.

அவர்களும் பயணம் செய்கின்ருர்களே தலைவா? கூட்டத்தின் இடையிலேயிருந்து மற்றொருவன் தொடுத்த வினு, தலைவனின் விழியை அவன் பக்கம் இழுத்தது வெற்றிலைக் காவி படிந்து உலர்ந்து போயிருந்த கப்பல் தலைவனின் இதழ் சிரித்துவிட்டு, பேச அசைந்தது—

"ஆமாம் தம்பி, அவர்களும் பயணம் செய்கின்ருர்கள் தான்—ஆனுல் அவர்களின் பயணத்தின் முடிவைப் பற்றி அவர்களே இன்னும் ஒரு முடிவுக்கும் வராதவர்கள்! பாவம் நொண்டியாக இருந்தாலும் ஓட முயலுகின்ருர்கள். ஒளி மங்கிப்போன விழிகள் பெற்றதால் எழுத்தின் வடிவம் தெளிவாக விழிகளுக்குப் புலப்படாதபோதும், சுவடிகளைப் படிப்பதுபோல் பாவனை செய்கின்ருர்கள்.

கூட்டத்திலிருந்து, துரோகிகள் ஒழிந்ததே நல்லது, என்றெழுந்த பல குரலோசைகள் ஒன்

சென்று உண்மையான தோற்றத்தோடு தெரிந்துதானே தீர வேண்டும்!" சிரித்தபடி கூறி நிறுத்தினுன்.

"வேண்டிய அளவு பலம் பெற்றிருந்தாலும் இந்தப் பெருங்கடலில் நாம் செல்லும் பயணத்தின் இடையிலே எத்தனையோ பெரும் பெரும் தடைகள் எழுந்தன; எழுகின்றன, இனியும் எழலாம்! ஆனுல் தடைகளாக எழுந்தவைகளை இளகாத நெஞ்சம் கொண்டதால் சமாளித்துக் கொண்டோம். எழுகின்றவைகளை, உறுதியோடு எதிர்த்துக் கொண்டே கப்பலை செலுத்துகின்ரேம்! இனி நேரப்போகின்ற தடைகளையும், நாம் எதிர்த்து போக்கிக்கொள்ள நம் வைரம் பாய்ந்த மனதில் தளராத ஆள்வினை வேண்டிய அளவு வியாபித்திருக்கின்றது.

ஆனுல்—பிரிந்துச் சென்றவர்கள் பெற்றிருப்பதோ ஓட்டைப் படகு; மேலும் படகை செலுத்த வைத்திருக்கும் துடுப்போ பழையது—ஏன் வலுவற்றதுங்கூட! இவர்கள் எப்படி இந்தப் பெருங் கடல் பயணத்தில் வெற்றியை சந்திக்க முடியும்?"

பிரிந்து சென்றவர்களின் பரிதாபகரமான பயணத்தால், அனுதாபப்பட்டு ஒருவன் கப்பல் தலைவனை நோக்கி இப்படி வினவினுன்.

"பயணத்தில் வெற்றி காண வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் நம்மைப் பிரியவில்லை! பயணத்தைத் தொடங்கவில்லை! நம்முடைய உயரிய முயற்சிக்குத் தடைகள்பல போடவே அவர்கள் விலகினுர்கள்! பயணத்தை மேற்கொண்டார்கள்! எனவே அவர்கள், தங்கள் நிலையைப் பற்றி நினைக்காமல்—நமக்கு ஏதாகிலும் கெடுதிகளை செய்ய வழி உள்ளதா என்றுதான் நினைப்பார்கள். இதில் ஐயத்திற்கும், வியப்பிற்கும் இடமே இல்லை!" கூட்டத்தில் அமர்ந்திருந்த மற்றொருவன்,

முன்னவன் விடுவித்த வினவிற்கு பதிலளிக்கும் பொருட்டு பேசி முடித்தான்.

கப்பல் தலைவனின் ஒளி துள்ளும் கருவிழிகள் இருளைக் கிழித்துக்கொண்டு கடலை நோக்கியது.

"கூருக இருந்தாலும் கத்தி, இரும்புத் துண்டை பிளக்கமுடியாது—அப்படி இரும்புத் துண்டை வெட்ட மோதினால் கத்தியின் கூர் தான் மழுங்கிவிடும் தம்பி" கப்பல் தலைவன் கப்பலை இயக்கியபடி கூறினான்.

"வலுவற்றவர்களாக நம்மிடம் வந்து வலுப்பெற்றபின் நம்மையே தாக்க முயலுகின்றார்கள்-துரோகிகள்—நன்றி கெட்டவர்கள்." படித்துக் கொண்டிருந்த திருக்குறளை மூடியபடி ஒருவன் சினத்தோடு பேசினான்

"சக்கரத்தினால்—வெறும் களி மண், அழகான—ஒழுங்கான குடமாக உருப்பெற்றப்பின், பேதமை எண்ணம் கொண்டு சக்கரத்தையே உடைத்துப்போட வேண்டுமென்று நினைத்து சக்கரத்தை மோதினால் சக்கரம் அழிந்துவிடுமா? குடம் தானே உடைந்து அழிந்துபோகும் தம்பி?"

சாந்தம் மிளிரும் முகத்தில் அறிவு ஒளிச் சுடர் வீச கப்பல் தலைவன் கூறினான்!

"நம்மை இழிவாக அல்லவா! கேலி செய்தார்கள்?" கப்பல் தலைவனைப் பார்த்து ஒருவன் சினத்தோடு கேட்டான்.

"என்னதான் இகழ்ந்தாலும் பொன், பொன்தான்! என்னதான் புகழ்ந்தாலும் பித்தளை, பித்தளை தான்! கொள்கையற்றப் பணியை இழந்தவர்கள், இனிமேல் கொள்கையற்ற வேலையை செய்யத்தானே துணிவார்கள். நாம் எளியவர்கள்தான், ஆனால் நாம் செய்துகொண்டிருக்கும் செயல்களோ மிகவும் உயர்ந்தது பெருமை வாய்ந்தது! ஏன்—இன்றைய உலகிற்கு மிகவும் தேவையானதும்கூட!"

கப்பல் தலைவன் அவன் தோழர்களைப் பார்த்து கனிவு ததும்பும் குரலிலே பேசிமுடித்தான்.

"பிரிந்து சென்றவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் தலைவா?" மூடிக் கிடந்த புறநானூற்றை திறந்தபடி ஒருவன் கேட்டான்.

"சிறகு முளைத்து, பண்படாத முன்னே வெளி உலகிலே பறக்க எத்தனித்து கூட்டைவிட்டு கீழே வந்து வீழ்ந்த குருவிக் குஞ்சைப் போன்றவர்கள் அவர்கள். காம்பிலே ஒட்டிக் கொண்டிருந்த உறவை அறுத்துக்கொண்டு மண்மேட்டிலே வீழ்ந்த இலைச்சருகுகள்தான், அவர்கள்! உதடுக்கும், மனதிற்கும் உறவைவைத்துக்கொள்ளாத நம்பிக்கைத் துரோகிகளின் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவர்கள் தான் அவர்கள்! வேறென்ன சொல்வது தம்பி?

எழுதாத வெறும் காகிதச் சுருளை, எழுதிமுடித்த காவிய நூலென்று எண்ணி நான் ஏமாந்தேன்.

இவர்களின் பிரிவு எனக்கொரு நல்ல பாடம்! இவர்கள் பேசிச் சென்ற கேலி மொழிகள், என் முயற்சியென்னும் அகல் விளக்கு ஜீவச் சுடரை மங்காமல் வீசிக் கொண்டிருக்க உபயோகமாகும் தூண்டுகோல்!

தம்பிகளே! நாம் நம்மையே நம்பிதான் இந்தப் பயணத்தில் ஈடுபட்டோம்; ஆகையால் பிறரின் கேலி மொழிகள் நம்மை தளர்த்தி விடாது! அதேபோல் பிறரின் போலி புகழ் மொழிகள் நம்மை வளர்த்துவிடாது!

நம்முடைய சீரிய பணியின் பின்னாலே ஒளிந்து கொண்டிருக்கும், நமது வெற்றியை நாம்தேடி கண்டுபிடிக்க வேண்டுமே தவிர—பிறரின் செயல்களால் ஆயாசமோ, ஆத்திரமோ எதுவுமே கொள்ளக்கூடாது நாம்!"

கப்பல் தலைவன் உணர்ச்சிக் குமுறி பொங்கும் வார்த்தைகளால் தன் உள்ளக் கிளர்ச்சியை சூழ்ந்திருந்த தன் நண்பர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

திடீரென்று, கப்பலின் மேல் தளத்திலிருந்து, கரை தெரிகிறது என்று எழும்பிய குரல் கப்பல் தலைவன் பேச்சிற்கு முற்றுப் புள்ளியாக அமைந்தது!

அந்தக் குரலைச் செவிமடுத்தவர்களின் முகங்களோ வியப்புக் குறியாக மாறியது!

சிந்தனை படிந்து கிடந்தவர்களின் முகத்தில் வெற்றியின் களை தவழ்ந்து விளையாடியது!

ஆசைப் பிரவாகம் பொங்கி வழியும் மனதோ அவர்கள் கப்பலின் மேல் தளத்தை நோக்கி—வில்லினின்று விடுபட்ட அம்பு போல் பாய்ந்தோடினார்கள்.

அவர்கள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் அவர்களின் நெஞ்சத் திரையில் அசுர வேகத்தோடு வெறியாட்டம் போட்ட வெற்றிக் களிப்பை படம் பிடித்துக் காட்டியது! இரவெல்லாம் ஒளிக்கற்றைகளை வாரி வீசிக் கொண்டிருந்த நிலவுவட்டம் மேற்கு திசையின் மூலை நோக்கி சரிந்து வீழ்ந்தது!

வீழ்ந்துவிட்ட நிலவின் பரிதாப வீழ்ச்சி, உதிக்கப் போகும் உதய சூரியனின் மகிழ்வான எழுச்சியை சொல்லாமல் சொல்லியது!

அக்கரையிலே நீண்டுயர்ந்து வளர்ந்துகிடந்த மரங்கள், கப்பலின் மேல் தளத்தில் நின்றவர்களின் விழிகளுக்கு மங்கலாக—பனிப் புகையின் இடையிலே தோன்றுவதுபோல் தோற்றமளித்தது!

கற்பனைச் சுடரின் நிழலாடிக் கொண்டிருந்த கப்பல் தலைவனின் விழிகள் ஆனந்தத்தால் உயர்ந்தன.

"நம்முடைய ஓயாத முயற்சி உயர்வான பலனை நமக்கு அளித்துவிட்டது" விழிகளைத் துடைத்தபடி கப்பல் தலைவன் கூறினான்.

கப்பலிலே உள்ள அத்தனைத் தோழர்களின் சுறுசுறுப்பான செயல்கள்—அவர்களின் நெடுங் கால போராட்டத்தின் வெற்றியான முடிவை—அவர்கள் கண்டு கொண்டிருந்த இலட்சிய கனவு நினைவாகிவிட்ட அற்புத நிகழ்ச்சியை பிரதிபலித்தன.

இருள் விலகியது!

இளஞ்சூரியன் செவ்விய ஒளி வானெல்லாம் பரவி வழிந்தது—எங்கும் ஒளி மயம்! புத்துணர்ச்சி!

சிறகடித்துப் பறந்த பறவைகளின் சப்தங்களிலே மந்தகாசமான இசை வெள்ளம் சுரந்து—காற்றிலே கலந்து சுற்றுபுரத்தை இனிமையால் நனைத்தது!

நீலவிசும்பின் அகன்ற பாதையில் உதய சூரியன் கம்பீரமாகப் பவனி வந்தான்!

புதிய நகரத்தின் புனித பூமியில் கப்பல் தலைவன் தன் விசுவாசமுள்ள தம்பிகளோடு இறங்கினான்.

கப்பல் தலைவனின் மெல்லிய இதயம் இன்பத்தால் கனத்தது! அவன் விழிகள் தன்னைச் சூழ்ந்து நின்ற தன் தம்பிகளையும், அந்தப் புதிய நகரத்தின் சுற்றுப்புரத்தையும் மாறிமாறி நோக்கியது!

அந்தப் பார்வையிலே வெற்றி களிப்பும், நன்றியுணர்ச்சியும் நர்த்தனமாடியது!

* * *

மெய்மறந்து நின்று கொண்டிருந்த, கப்பல் தலைவனின் கூட்டத்தை; "ஐயா ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்" என்றெழுந்த ஓலக் குரல்கள், உண்மை நிலைக்குக் கொணர்ந்தது!

ஒலி வந்த திசை நோக்கி எல்லோரும் ஓடினார்கள்.

அங்கே—

சில மீன்காரர்கள் தங்களின் ஓடத்திலிருந்து அழுகிப்போன உடல்களை இறக்கி மண்ணிலே கிடத்திக் கொண்டிருந்தார்கள்.

பிண நாற்றம் காற்றை அசுத்தப்படுத்தியது.

வீழ்ந்து கிடந்த பிணங்களை 'சுறுக்கள்' தங்களால் இயன்ற அளவு சாப்பிட்டிருந்தன.

பிணங்களின் முகத்தைக் கப்பல் தலைவன் குனிந்து நோக்கினான்,

மறுகணம், ஆவென்று அலறிவிட்டான்! அவனைச் சுற்றி நின்ற அவன் அருமைத் தம்பிகளின் முகங்களும், அப்பிணங்களைக் கண்டபின், வியப்பால் சிறுத்துக் கருத்தன.

காரணம்?

பிணமாகிக் கிடந்தவர்கள் வேறுயாருமில்லை, பிரிந்து சென்றவர்கள்தான்!

இவர்களை எப்படி நீங்கள் கண்டுபிடித்தீர்கள்? கண்களைத்

(10-ம் பக்கம் பார்க்க


# வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி




தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

## வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 75 ந.பை.

## ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 3. வி. பி. பி. செலவு ரூ 1.

## குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,
(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

# இந்தியா—ஒரே நாடு அல்ல!

**"நாம் மூவரும் கம்யூனிசுட்டுகள்... ஆகவே, ஏக ஆட்சியின் கீழ், ஏக தலைமையின் கீழ் இயங்குவோம், என்று ஏன் ரஷ்யா, சீனு, யூகோ சொல்லவில்லை?"**

**ஏ. கலைமுகிலன்**

திராவிட முன்னேற்றக் கழகம் தென்னக மக்களின் நல்வாழ்வுக்கும், திராவிட விடுதலைக்கும் வழிவகுத்து, வெற்றி முகடு நோக்கி விரைந்து கொண்டிருக்கும் ஓர் மாபெரும் விடுதலை இயக்கம் என்பதைநாடு நன்குஅறிந்து அதன்வழி தங்கள் தங்கள் பங்கைச் செலுத்தி வருகின்றனர்! அந்த மாபெரும் இயக்கத்தின் இலட்சிய முழக்கமான "திராவிட நாடு திராவிடர்க்கே!" என்ற விடுதலைக் குரலைக் ஒலிக்கின்ற நேரத்தில்பிரிவினைக்கானவிளக்கங்களைத் தருகின்றபோது, அவனிக்குத் தெரிவித்திருக்கிறது.திராவிட முன்னேற்றக்கழகம் "ஏக இந்தியா"வின் ஏமாற்றுருவை தெளிவுற விளக்கியபோதெல்லாம் வரலாற்றுத் துணைகொண்டும், அறிஞர் பெருமக்களின் ஆய்வுரைகளைக் கொண்டும் எடுத்து முன்வைத்து வாதிட்டு வந்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்கூறி, "ஏக இந்தியா" இல்லாத ஒன்று. துப்பாக்கி முனையிலே உருவாக்கப்பட்ட ஒன்று என்று கூறிய அதே கருத்தைசிறிது அழுத்தந்திருத்தமாக அண்மைக்காலத்திலிருந்து திரு. கார்வே அவர்கள் தெளிவாக்கி வருகிருர். அவர் அப்படி விளக்கிய கட்டுரையொன்றை 1—7—61, 3—7—61 ஆகிய நாட்களில் "நம் நாடு" இதழில் வெளியிடப்பட்டது. அந்தக் கட்டுரை கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு எரிச்சலைத் தந்ததோ, என்னவோ, நாம் அறியோம்! எடுத்தேன், கவிழ்த்தேன், என்கிறமுறையில் 6-7-61 'ஜனசக்தி' ஏட்டில், உரைகல் பகுதியில், தங்களுக்கே உரித்தான உளறலை வார்த்தைகளாக வடித்தெடுத்திருக்கிருர் உரைகல்லார்.

"கார்வேயின் கண்டு பிடிப்புகள்!" என்ற தலைப்பில்."கார்வேயின் கண்டுபிடிப்புகள்" என்றதைவிட "கம்யூனிசுடுகளின் கண்டு பிடிப்பு என்று எழுதி இருந்தால் அந்த மெத்தப்படித்த 'மேதை'களின் மேதாவித்தனம் மேதினிக்கும் பிடித்தமாக இருந்திருக்கும்! அப்படியென்ன கண்டு பிடித்து விட்டார்கள்? என்கிறீர்களா? இதோ!

"கால காலமாகவே இந்தியா ஒரு நாடாக கருதப்பட்டு வந்திருக்கிறது. 55-க்கு மேற்பட்ட அரசுகள் இருந்தபோதிலும் ஏகஇந்தியாவாகவே கொள்ளப்பட்டு வந்திருக்கிறது."

இதுதான் உரைகல்லாரின் கண்டுபிடிப்பு! அப்பப்பா! எவ்வளவு துணிவான பொய்!!

மேலும் தன் வாதத்துக்கு வலிவூட்ட எண்ணி, அலெக்சாண்டரையும், கொலம்பசையும்துணைக் கழைத்திருப்பதுதான் விந்தையினும் விந்தையாக இருக்கிறது!

அன்று அலெக்சாண்டரும் பிறரும் கண்டது இமயம் தொட்டு குமரி மட்டும் பரவிய இந்தியா அல்ல! சிந்துநதிக் கரைப் பகுதிகளைத்தான்! சிந்து நதிப் பகுதிக்கு மட்டும் "சிந்துஸ்தான்" என்று கிரேக்கர்களால் அழைக்கப்பட்டு, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அதிகாரம் செலுத்தும் ஆசையின் காரணமாகப் பின்னுளில் உருவாக்கப்பட்டதுதான் இன்றைய இந்தியா! இதைவிட தெளிவாகக் கூறவேண்டுமானுல் கம்யூனிசுட்டுக்களின் பெருந்தலைவர்களிலே ஒருவரான எஸ். ஏ. டாங்கே என்பார் எழுதிய 'பண்டைக்கால இந்தியா' என்ற 300 பக்கங்களுக்கு மேற்பட்ட அந்தநூலின் 244ம் பக்கம் எழுதுகிருர்:

ஹிந்துஸ்தான் என்பதும், ஸிந்துஸ்தான் என்பதும் ஒரே சொல்லின் இரு உருவங்களே; ஸிந்து நதியிலிருந்து நம்தேசம் பெற்ற பெயரே ஹிந்துஸ்தான்

என்று தெள்ளத் தெளிவாக விளக்கி இருக்கிருர், அப்படி ஹிந்துஸ்தான் உருவாக்கப்பட்ட காலம் எது என்பதையும் கூறுகிருர், படியுங்கள்:

"நவீன காலம் என்று சொல்லத்தக்க காலத்தில், மத்திய ஆசியாவிலிருந்து ஸாகர்களும், பஹ்லவர்களும், இதர இனங்களும் நுழைந்தன. அவர்களே நம் தேசத்துக்குச் சிந்து நதியின் பெயரை அளித்தனர். அந்த மக்களின் 'ஸி' என்பதை 'ஹி'என்று உச்சரித்ததால், அந்தச் சொல் (ஸிந்துஸ்தான்) ஹிந்துஸ்தான் என்று திரிந்து வழக்கில் வந்துவிட்டது,"

என்று இந்தியா உருவான காலத்தைக் காட்டிசிந்துநதியின் பெயரால் உருவாக்கப்பட்டதே இந்தியா—சிந்துநதிப் பகுதிக்கு மட்டுமே இருந்த பெயர்தான் இந்தியா என்று கூறுகிருர்.

அப்படி உருவாக்கப்பட்ட நேரத்திலும்கூட ஏக இந்தியா இல்லை என்பதை அதே பாராவில்,

"பண்டைக்கால எழுத்தாளர்களும், ஜனங்களும் தாம் வாழ்ந்துவந்த நிலத்துக்கு அதில் வசித்த குலம், அல்லது தேசியஇனத்தின் அடிப்படையிலேயே நாமம் சூட்டினுர்கள்; உதாரணமாக, மத்ஸயர்கள்வாழ்ந்தபூமிமத்ஸய தேசம் என்று அழைக்கப்பட்டது."

என்று தெளிவுபடுத்தி இருப்பது, ஏனே பார்வையில் படாமல் போய் விட்டது! அப்படிப் பார்வையிலே பட்டிருந்தால் பதுங்கி இருப்பாரோ அல்லது டாங்கே மீது பாய்ந்திருப்பாரோ, அது நமக்கு தெரியாது!

இப்படிப் பல்வேறுபட்ட தேசிய இனம் ஆங்காங்கே இருந்திருக்கிறது, அப்படிஇருந்த பல்வேறுபட்ட தேசிய இனங்களையும் ஒன்றுபடுத்தி, ஒரே இந்தியா உருவாக்கப்பட்டது பதினெட்டாம் நூற்ருண்டிலேதான் என்பதை, அதே நூலில் 44ம் பக்கம் 'ஆரியன் தோற்றம்' என்ற தலைப்பில் எழுதுகிறபோது,

"பிரிட்டிஷ் கால கட்டத்தில் நிகழ்ந்த பிளாசி யுத்தத்துடன் நவீன இந்தியாவின் வரலாறு தொடங்குகிறது" என்று குறிப்பிட்டுவிட்டு மேலே செல்லும்போது,

"கிட்டதட்ட தேசம் முழுவதையும் ஆளக்கூடிய மத்திய ஆட்சி, பதினெட்டாம் நூற்ருண்டின், மராத்தி ராஜ்யங்கள் ஏற்படும்வரை அமையவில்லை. அவை அமைந்த பிறகே ஒரு ஹிந்துஸ்தானத்தைப்பற்றி ஜனங்கள் உண்மையில் பேச முடிந்தது. ஆங்கிலேயர்கள் தமது அரசியலமைப்பையும், முதலாளித்துவப் பொருளாதாரத்தையும் இந்நாட்டில் புகுத்தினுர்கள்; அது இந்தியாவின் ஒருமைப்பாடு சம்பந்தமான கருத்தையும், உணர்ச்சியையும் ஒரு மெய்ப்பொருளாக ஆக்கி நிறைவு செய்தது. அந்த மெய்ப்பொருள் மிக குறுகிய காலவரம்புக்குக்குட்பட்டிருந்ததென்பதும் வேறு பலமுரண்பாடுகளால்நிறைந்திருந்ததென்பதும் உண்மையே" என்று குறிப்பிடுகிருர்.

திரு. டாங்கே இவ்வளவு தெள்ளத் தெளிவாக எழுதி இருப்பது என்னருமைக் கம்யூனிஸ்டு தோழர்களுக்கு தெரியாது போனதுதான் நமக்கு திகைப்பா இருக்கிறது!

எவை எவைகளுக்கு, எங்கெந்த நூல்களையோ யார் யாரையோ இழுத்து வாதாடுகின்ற உரைகல் வீரர்கள் ஏனே, டாங்கேயின் 'பண்டைக்கால இந்தியா'வை மறந்து விட்டனர்! எவை யெவைகளையோ படிக்கின்ற மாவீரர்கள் தங்கள் ஓய்வு நேரத்திலாவது டாங்கேயின் நூலைக் கொஞ்சம் புரட்டிப் பார்க்கக்கூடாதா? ஒருவேளை அந்த நூலைப் புரட்டிப் பார்த்து, "புளித்துப்போன சர்ச்சிலின் கருத்தையல்லவா சொல்லியிருக்கிருர்" என்ற வெட்கத்தாலும் வேதனையாலும் காட்டிக் கொள்ளாமல், "பண்டைக்கால இந்தியா"வை அவர்களைத் தவிர வேறு யாரும் படித்திருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில் எழுதத் தொடங்கினுர்களோ என்னவோ, அதுவும் நமக்கு தெரியாது! ஆனுல் உண்மையை மூடிமறைக்கிருர்கள்என்பது மட்டும் தெளிவாக தெரிகிறது!

இருட்டறையில் பூட்டப்பட்டவன் ஒளியுலக மக்களைப்பார்த்து "உலகமே இருண்டு விட்டிருக்கிறதே" என்பதுபோல் சர்ச்சிலின் கருத்தைப் புளித்துப்போன சரக்கென ஒதுக்கித்தள்ளினுலும் டாங்கே சுடச்சுட விருந்து வைத்தார்.

"பண்டைக்கால இந்தியா" என்ற நூலில் டாங்கே மட்டு

மல்ல. கார்வே மட்டுமல்ல. மத்திய அரசாங்க மந்திரியாகவும், பின் ஒரு மாநிலக் கவர்னராகவும் இருந்த கே. எம். முன்சி அவர்கள் 1957ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பம்பாயில் ஒரு கூட்டத்தில்,

"வரலாற்றில் இப்போதுதான் இந்தியா ஒரே கட்சியின்கீழ் உருவாக்கப்பட்டிருக்கிறதுஎன்ருர்.

இதற்கு முன் ஒரே இந்தியா உருவாக்கப்படவில்லை என்றுதானே பொருள்! கூறி இருப்பவர் கார்வே அல்ல! மத்திய அமைச்சராக இருந்தவர்; கவர்னர் பதவி வகித்தவர்; ஏன் கூறினுர்? வரலாற்றை மறைத்துவிட முடியும் என்ற எண்ணம் இல்லாததால்!

முன்ஷி மட்டுமா கூறினுர்? காந்தியாரின் பிரதம சீடர்; முக்கியமானவர் என்று கருதப்பட்ட மீராபென் அவர்கள் 1958ல் சுதந்திரா என்ற ஆங்கில வார ஏட்டில்.

"வெள்ளைக்காரர்கள் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுபட்டதும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் புத்தெழுச்சிஎழுந்துள்ளதை நான் காண்கிறேன். தங்கள் உரிமைகளை—எண்ணங்களை வலியுறுத்துவனவாகவே அவைகள் இருக்கின்றன. மத்திய அரசு ஆணவமாக இல்லாமல் அனுதாபத்தோடு இவைகளைக் காண வேண்டும். இன்றேல் எந்த ஒற்றுமைக்காகப் பாடுபடுகிருர்களோ, அந்த ஒற்றுமை எண்ணம் உடைபட்டுப்போகும்" என்று எழுதி இருக்கிருர். மத்திய அரசு அனுதாபங்கொள்ளா விட்டால் ஒற்றுமை முயற்கொம்பே என்கிருர்! அதுவும் "எந்த ஒற்றுமைக்காகப் பாடுபடுகிருர்களோ"என்ருல் இன்னும் ஒற்றுமை சரியான அளவுக்கு உருவாகவில்லைஎன்றுதானே பொருள்? நிலையான ஒற்றுமை உருவாகி இருந்திருந்தால் இதுபோல் எழுதியிருக்க முடியுமா?

இப்படி இருக்கிற ஒற்றுமை எந்த அளவுக்குப் பலஹீனமானதாக—உடைபடத் தக்கதாக இருக்கிறது என்பதை மத்திய அரசாங்க உதவி நிதிமந்திரியான திருமதி தாராகேஸ்வர் சின்ஹா அவர்கள் ஆமதாபாத் நகரில் கூடிய குசராத் இளைஞர் காங்கிரசில் பேசியபோது படம்பிடித்துக் காட்டி இருப்பதைப் படியுங்கள்:

"பண்டித நேருவின் தனிப்பட்ட செல்வாக்கால் பிரிந்து போகும் சக்திகள் கட்டுப்பட்டு இருக்கின்றன. ஆனுல் எல்லா மனிதர்களும் இறக்கவேண்டியவர்களே. நேருவும் ஒரு வயதான மனிதர்தான்!" என்று குறிப்பிட்டுள்ளது. 'இந்திய ஒற்றுமை' என்பது எந்தஅளவுக்கு பலஹீனமடைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டவில்லையா? நேருவுக்குப்பின்... இந்திய ஒற்றுமை என்பது கற்பனைக் கனவுதான் என்பதை வெளிப்படுத்தவில்லையா?

ஆட்டங்கண்டு கொண்டிருக்கும் அகில இந்திய ஒற்றுமைக்கு முட்டுக் கொடுக்கக் கிளம்பிய உரைகல்லார் மேலும் சோவியத்தையும், ஆங்கிலேயர்களையும் செக்கோஸ்லவேகியாவையும் எடுத்து வைத்துக்கொண்டு வாதமிடுகிருர்!!

குறிப்பாக அயர்லாந்தை எடுத்துக்கொண்டால் அதன் வரலாற்றைச் சிறிது புரட்டிப் பார்க்க முனைந்தால் நிறை—உடை—பாவனை ஆகிய அனைத்திலும் ஆங்கிலேயர்களோடு ஒத்தத்தன்மை கொண்ட அயிரிஷ் மக்கள் விடுதலை முழக்கமெழுப்பிய நிகழ்ச்சிகளைக் காணலாம்! ஏறத்தாழ ஒத்த தன்மை கொண்ட அயிரிஷ் மக்களும், ஆங்கிலேயர்களும் ஒன்றுபட முடியவில்லை! ஏன்? நாட்டுப்பற்றும் இனப்பற்றும், மொழிப் பற்றும் அங்கே ஓர் மாபெரும் தேசிய எழுச்சியாக்கிக் காட்டியது!

அதைப்போலவேதான் ஐரோப்பாவிலும் பல்வேறுபட்ட தேசிய இனங்கள் தனித் தனியே தன்னுட்சி செலுத்துவதைக் க ண்கிரோம்.

பல மொழி பேசும் மக்களையும் ஒன்றுபடுத்தி தங்கள் அதிகாரத்தை வலிவாக்கஇந்தோனிஷ்யாவை உருவாக்கியது டச்சு ஏகாதிபத்தியம்! அப்படி உருவாக்கப்பட்ட காரணத்தால், அங்கே பல்வேறுபட்ட தேசிய இனத்தவரிடையே எழுந்த எழுச்சியின் விளைவுதான் மக்காஸர், மோலுக்கஸ் ஆகிய பகுதிகளின் எழுச்சியாகும்!

எந்த ஓர் தேசிய இனம் அடக்கி ஒடுக்கப்பட்டாலும், எவ்வளவு வலிமைகொண்டு அத்தேசிய இனத்தை அழுத்திக் கொண்டிருந்தாலும், அந்தஅழுத்தம்—வலிமை — நிச்சயம் நிலைகுலைந்தே தீரவேண்டும் என்பதைதான் மேற்கண்ட நாடுகள் நமக்கு நன்குணர்த்துகின்றன. ஏன், ரஷ்யாவின் பாதைக்கே வருவோம்.

கடந்த 1956ம் ஆண்டிலும் 1957ம் ஆண்டிலும் ரஷ்யாவின் மண்ணில் அங்கேரியில் எழுந்ததே புரட்சி; அது ஏன்? அந்த எழுச்சியை அடக்கி, ஒடுக்கி, நசுக்க ரஷ்யா முனைந்ததும் ஏன்? அங்கேரிய எழுச்சி; ஒரு தேசிய எழுச்சி என்று ஐ.நா. அறிக்கை வெளியிட்டதை பல்வேறுபட்ட மக்கள்—பல்வேறுபட்ட இனத்தவர்கள் ஒன்றுபட்டு வாழவில்லையா? என்று வினவெழுப்புவர்கள், அங்கேரியமக்களின் உளங்கவர்ந்த ஒப்பற்ற தலைவன் இம்ரே நாகியை ரஷ்யாவில் கொல்லப்பட்டதற்குக் காட்டபோகும் காரணம்தான் என்ன? இன்னும்—இன்றும் அங்கேரி குமுறும் கடல் போல் காட்சியளித்துக் கொண்டிருப்பதும் ஏன்? பல்வேறுபட்ட இனத்தவர்கள் மொழியால் வேறுபட்டவர்கள் — கலை — நாகரீகம் பண்பாடு ஆகியவற்ருல் மாறுபட்டுற்ற தேசிய இனத்தவர்கள் ஒரே ஆட்சியின்கீழ் வாழ முடியும் என்பது உண்மையானுல் அங்கேரியின் எழுச்சிக்கு நியாயமில்லை; இம்ரேநாகி கொல்லப்பட வேண்டிய சூழ்நிலையும் இல்லையே!

ரஷ்யாவிலேநடப்பதுகம்யூனிச ஆட்சி, சீனுவிலே நடப்பதும் கம்யூனிச ஆட்சிதான ! யூகோவிலே நடப்பதும்கம்யூனிசஆட்சிஆகவே இம்மூன்றுநாடுகளும் ஒன்றுபட்டு "நாம் மூவரும்கம்யூனிசுட்டுக்கள் ஆகவே ஒரே ஆட்சியின் கீழ்—ஒரே பாராளுமன்றத்துக்கு கீழ் இயங்குவோம் என்ற முடிவுக்கு வராதது ஏன்? ஏன் ஒரே பாராளுமன்றத்தை உருவாக்கக்கூடாது? அப்படி உருவாக்குவதிலேதான் என்ன தவறு இருக்க முடியும்? பல்வேறுபட்ட மொழி பேசுபவர்கள்—பல்வேறுபட்ட இனத்தவர்கள் ஒரே ஆட்சியின்கீழ் இயங்கலாம்; இயங்க இயலும் என்பவர்கள், ஏன் இந்தத் திட்டத்தைச் செயலாற்றக்கூடாது?

ஒரே ஆட்சியின்கீழ் வருவது கிடக்கட்டும். யூகோ, சீனு, ரஷ்யா மூன்றும் உள்ளன்பு கொண்டு உறவாடுகின்றனவா? என்ருல் இல்லையே!

"எங்கள் நாடு கம்யூனிச நாடுதான், ஆனுலும் உங்களையே அபபடியே பின்பற்றி உங்கள் வழியைப் கடைபிடிக்க முடியாது" என்று கூறியதே யூகோ! யூகோ மட்டுமா கூறியது? அதைப்போலவே சீனுவும் கூறிவிட்டதே முகத்தில் ஓங்கி அறைவது போல்! சீனுவும் ரஷ்யாவும் இன்று எலியும் பூனையுமாகக் காட்சியளிக்கின்றனவே! ஒரே கருத்துடைய ஒரே கொள்கையுடைய இந்நாடுகள் ஒன்றையொன்று புரிந்து கொண்டு — உள்ளன்பு கொண்டே உறவாட முடியவில்லை என்ருல், பல்வேறுபட்ட இனமக்கள்—பல்வேறுபட்ட மொழி பேசுபவர்கள் கருத்தால்—கொள்கையால் மாறுபட்டவர்கள் எப்படி ஒரே ஆட்சியின் கீழ் இயங்க முடியும்? என்பதை ஏனோ கம்யூனிசுட்டுத் தோழர்கள் உணர்ந்து பார்க்கத் தவறுகிருர்கள்! தங்கள் தவற்றை உண்மையை உரைப்பவர்கள்மீது திருப்பிவிடுவதுதான் விந்தை! விந்தை!!

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துடைத்தபடி தலைவன் மீன்காரர்களை நோக்கிக் கேட்டான்.

"ஐயா, இவர்கள் பாதை தவறியவர்கள். முயற்சித்து உயிர் விட்டவர்கள். இவர்கள் பயிற்சியில்லாமல் கடலிலே இறங்கியவர்கள் போலும், அதனுல்தான் நீரில் தோன்றும்கொடிய நீர்ச் சுழலினின்று தப்பிக்க முடியாமல் படகு ஒடிந்து—இறந்து நீரில் மிதந்து கொண்டிருந்தார்கள். மீன் பிடிக்கச் சென்ற நாங்கள் இந்தப் பிணங்களை இப்போதுதான் கரைக்குக் கொண்டு வந்தோம்"

மீன் காரனின் குரல் ஓய்ந்தது.

"தர்க்க ரீதியாக முழுமைப் பெருத நினைவுகளை உயர்ந்த 'சம்பத்தாக, நினைத்து பிரிந்துபோன கண்ணுளர்களுக்கு, பாவம்......" கூட்டத்தில் ஒருவன் துயர் வழியும் சோகக் குரலை முழக்கினுன்.

"துரோகமும், பொருமையும் உலகில் வென்றதாக, சான்றுகளே இல்லை!" ஒருவனின் இதழ்கள் முணுமுணுத்தன.

வீழ்ந்துகிடந்த பிணங்கள் துரோகத்தின் பரிதாப நிலையை விளக்கிக் காட்டின!

தலைவனும், அவன் அன்புத்தம்பிகளும், தாங்கள் செய்த பாவத்திற்கு பாவமன்னிப்பு கோறுவது போல் வீழ்ந்துகிடந்த அந்த உருவங்களுக்கு, இறுதி வணக்கம் செலுத்தும் பொருட்டு தங்களின் மேல் துண்டுகளினுல் அழுகிப் போன அவ்வுடல்களை மூடிவிட்டு திரும்பி நடந்தார்கள்! பயணம் முடியாத முன்னே, துரோகம் முடிந்துவிட்டது!

—0—

# அழைப்பு

27—8—61, ஞாயிற்றுக்கிழமை, காலை 9 - மணியளவில்

எனது மகள்

**மணிமேகலையை**

எ. செயராமன் அவர்களின் புதல்வன்

**செ. கமலக்கண்ணனுக்கு**

இல்வாழ்க்கை துணைவியாக்கும் திருமணவிழா, பெரிய காஞ்சிபுரம் கீழண்டை இராசவீதியிலுள்ள யாதவாள் சத்திரத்தில், அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெறும். நண்பர்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு தாங்கள் இல்லக் குழுவினருடன் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

அன்பன்,

**சி. வி. எம். அண்ணுமலை**

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

வாசகங்களை என்னால் மறக்கவே முடியாது!

'விடுதலை'யில் முசுலீமில் வாங்கிய சம்பளத்தைவிடக் குறைவு தான். ஆனாலும் அய்யா எனக்கு ரூபாய் நூறு தரச் சம்மதித்தார், என்று கேட்டு பலர் வியப்படைந்தார்கள்!! விடுதலையில் பணியாற்றுவதை நான் பெருமையாகக் கருதினேன். முதலாண்டு தான் வீணாய்ப் போயிற்று—இப்போதாவது ஏதாவது ஒருகல்லூரியில் சேர்ந்து படியேன் என்று என்னை ஆளாக்கியஎன் அன்னையின் அன்னை ஆவலோடு கூறிய போதுஅதைக்கூடப் புறக்கணித்தேன். துணை ஆசிரியன் எங்கே! கல்லூரி மாணவன் எங்கே!!

'விடுதலை' அலுவலக வாழ்வு மிக மிக ரசமானது. தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் காஷியராக இருந்தார். நான் பத்திரிகையில் செய்திகளுக்கு தலைப்பு போடுவது அவருக்கு மிகவும் பிடிக்கும். கழகத்தின் மீதுள்ள என்னுடைய ஆர்வம் கண்ட அவர் கூட்டங்களுக்குப் போய் வரச் சொல்வார். ஒருநாள் பெரம்பூரில் காலையில் நடந்த அம்பேத்கார் படிப்பகத் திறப்பு விழாவுக்கு போய்விட்டு வந்தேன். காலைமணி 11 இருக்கும். அலுவலகத்தில் அய்யா அவர்கள் இருந்தார்கள். அய்யா எப்போது வந்தாலும் நானும் கணேசு அவர்களும் இருக்கின்ற இடத்தில்தான் வந்து அமருவார்கள். கூட்டங்களுக்கெல்லாம் போய்விட்டு வந்தால், கழகத்துக்காகப் பாடுபடுகிறோம் என்று அய்யா பூரிப்பார் என்று தெம்போடு போய் உட்கார்ந்தேன்.

என்னை ஒரு முறை முறைத்துப் பார்த்தார் அய்யா. பிறகு அவராகவேமுனகினார், 'பொறுப்பில்லாம நடந்தா என்ன யோகயதை! அவனவன், அவனவன் வேலையைச்செய்யனும்'' என்று! அப்போது கூட்டங்களில் பேசுவதில் குறைந்த ஆர்வம் மீண்டும் திரும்ப நெடுநாளாயிற்று.

பல நினைவுகள் மின்னுகின்றன; எல்லாவற்றையும் விவரிப்பின் 'சுயபுராணம்' ஆகி விடும் என்று அஞ்சினாலும், கழகமெனும் பெருங்கடலில் நானும் ஒருதுளிதானே என்பதால், ஓரிரு சம்பவங்களை ஆங்காங்கே எழுதாமல் போக முடியவில்லை...

ஒரு சமயம் சி. பி. சிற்றரசு அண்ணன் 'விடுதலை' அலுவலகத்துக்குள் அடியெடுத்து வைக்கிறார். அதே சமயம், வெளியில் நின்ற 'வானில்' ஏற அய்யாவும் கிளம்புகிறார். எதிரே தென்பட்ட சி. பி. சி. அவர்களைப் பார்த்து, ''எங்கே வந்தே இங்கே? அடியெடுத்து வைக்கவுமா உனக்கு யோக்கியதை இருக்கிறது போ! போ!!'' என்று கனல்தெறிக்க அய்யாகூவவும், அந்தச்சொல்வலார் மௌனமாகப் பேசாமல் வந்த வழியே திரும்பியதும், என்னைக் கண்கலங்க வைத்தது...

இன்னொரு சமயம் மாவீரர் அழகிரி அண்ணன் ஊருக்குப் போக இரயிலுக்குப் பணமில்லாமல் 'கேஷியர்' கோவிந்தசாமியிடம் ரூ 40 வாங்கிக்கொண்டு போய்விட்டார். அதற்காக பெரியார் அவர்கள் போட்ட கூச்சல் ...அப்போது நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மறியல் (தோழியர் அலமேலு அப்பாதுரையார், சாலை கபீர் எனும் சிலர்) தொண்டர்கள் பட்டபாடு...அய்யாவின் வாழ்வே தன் வாழ்வுஎன இருந்த'விடுதலை' மானேஜரான திராவிடமணி அவர்களை வேலையிலிருந்து நீக்கிய சோகமானசம்பவம்...தோழர் சம்பத்து அவர்கள்'மானேஜராக' வந்ததும் ஆபீசில் பேப்பர் மடிக்கும் பையன்களின் சம்பளத் தகராறால் உண்டான உள்வேலை நிறுத்தம்...ஆசிரியர் குருசாமிக்கு வந்த பத்திரிகையெல்லாம் தன் வீட்டுக்குக் கொண்டுவரும்படி தோழர் சம்பத் போட்ட உத்தரவுகள்...சரி! வேண்டாம், அந்த நிகழ்ச்சிகள்!!

எனினும்இரண்டு முக்கியமான சம்பவங்களை என்னால் மறந்து விட முடியவில்லை ஒன்று தோழர் மதியழகன் அவர்களைப்பற்றியதாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கழகக் கொடி சம்பந்தமாகக்கலவரம்ஏற்பட்டுகாங்கிரஸ் மாணவர்களால் தோழர் மதியழனும் வி. வி. சாமிநாதன், விசுவநாதன் முதலிய மாணவர்களும் கடுமையாக தாக்கப்பட்டதோடு, அவர்கள்மீது வழக்கும் போட்டு விட்டார்கள்.

தோழர் மதி, அப்போது மாணவர் தலைவர். அதனால் அய்யாவிடம் வந்து, தங்களுக்கேற்பட்டுள்ள அவதிப்பற்றி எடுத்துச் சொன்னார். ஆறுதல் கூறவேண்டிய அய்யா, ''ஒரு கோவணம் போலுள்ள துணிக்காகவா, இவ்வளவு பெரிய ரகளை?'' என்று கொடியைக் கோவணத்துக்கு ஒப்பிட்டுச் சொன்னபோது, மதி ஓவென்றலறிவிட்டு, அதே வேதனையுடன், திருவல்லிக்கேணியிலிருந்த என் அறைக்கு வந்து சேர்ந்தார்!

பாவம்! அந்தச் சமயம் சென்னைக்கும் சிதம்பரத்துக்குமென்று அவர் பட்டபாடு, சொல்லமுடியாது!!

''என்ன மதி?'' யென்றால், என்னிடமும் சீறுகிறார். யாருக்குத்தான் இருக்காது? வழக்கோ, எதிர்காலத்தையே பாதிக்கக் கூடியது! எதிர்வழக்காடவோ பணம் வேண்டும்! பணம் இருக்கும் அய்யாவோ பாய்கிறார்! என்ன செயவார் மதி? அன்று மாலையில் பிரசிடென்சி கல்லூரியில் அண்ணா பேசுகிறார் என்று சிலர் சொன்னார்கள். ''அண்ணாவிடமாவதுபோய்ச் சொல்லலாம்'' என்று நானும் மதியும் போனோம்.

கூட்ட முடிந்து போகையில், ''மதி! வா...'' என்று அண்ணா அழைத்துப் போனார். ''திராவிட நாடு'' இதழ் மூலம் வசூல் அறிக்கைப்போடுவதாகச் சொல்லி, வசூலித்தும் வழக்கு நடத்த உதவினார், அண்ணா ... மறுநாள் இதைச் சொல்லும்போது மதியின் கண்களில் நான் ஒரு புது ஒளியைக் கண்டேன்!

இன்னொரு சம்பவம்: வழக்கம் போல் சென்னையில் நடைபெற்ற மேதின விழாவில் அண்ணா பேசியிருந்தார். அப்போதெல்லாம் 'விடுதலை'யின் சார்பில் முக்கியப் பேச்சுகளைத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தருவார்கள், அண்ணா அந்த மேதின விழாவில் பல அருமையான தத்துவங்களைப் பற்றிப் பேசியதோடு நாம் என்னென்ன செய்து தொழிலாளர்களை நம் பக்கம் கவனம் செலுத்தும்படிச் செய்ய வேண்டும் என்றும் சொல்லியிருந்தார். அதனால் அவருடைய பேச்சைப் பிரமாதமாகத் தலைப்புகளிட்டு விடுதலையில் போட்டு விட்டோம். இதைப் போன்ற 'ஆபத்துக்கள்' அண்ணன் குருசாமி இல்லாத சமயத்தில் எங்களுக்கு நேருவதுண்டு! இப்படிப் போட்ட மறுநாள் வந்த அய்யா 'யார்போட்டது?என றுகேட்டிருக்கிறார். என்னைச்' சொல்லியிருக்கிறார்கள். நான்வந்ததும் ''பெருமாள் சோத்தைத் தின்னுட்டுப் பெருமாளுக்கே துரோகம் நினைக்கிறீயா?'' எனறார் அய்யா!

என் மனமெல்லாம் கண்ணீராயிற்று. நான் அய்யா வீட்டுச் சோத்தைத்தின்னவாவிடுதலையில் கிடக்கிறேன்? என்வீட்டுச்சோறு எத்தனையோ பேருக்கு ஊரில் படைக்கப்படுகிறது! சோற்றுக்கு வழியற்று நான் விடுதலையில் பணியாற்றினேன்? தலைவருக்கு அடுத்த நிலையிலுள்ள ஒருவருடைய பேச்சைப் போடுவதா துரோகம்? உண்மையில்லாமல பொய்யைப் போட்டால் துரோகம்?— பேசாமல் 'கம்போசிங்' செய்யுமிடத்தில் உட்கார்ந்துவிட்டேன். தில்லை என்பவர் போர்மேன். அவர் எனக்கு ஆறுதல் கூறியும், பிறகு அய்யாவே கூப்பிட்டு அன்புரை தந்தும்கூட, என்னால் அதைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை...

அங்கிருந்து நான் எப்படி 'திராவிட நாட்டுக்கு' வந்தேன்? தூர இருந்தே அண்ணாவுடன் பழகிய நான் எப்படி அருகில் கவரப்பட்டேன்? என்பதையெல்லாம் எண்ணும்போதுதான், அண்ணாவின் அருமையான இதயமும், தன்னொத்த உயிர்களை அணைத்தும் என்கிற பெருநோக்கும் புரியும்!!

—வளரும்—

## வெற்றிக்கு வழி

ஒரு நல்ல விடுதலை இயக்கமானது அலட்சியம், கேலி, பழிச் சொல், அடக்குமுறை, மக்களுடைய மதிப்பு என்ற ஐந்து கட்டங்களை கடந்து வரவேண்டும். இந்த ஐந்து கட்டங்களையும் கடந்து வந்தால்தான் அந்த இயக்கம் உண்மையான வெற்றியைக் காணமுடியும்.

1921 - ல் காந்தியார்.

பூரிக்கச் செய்யும்
புதிய தொடர் கதை!

காதலோ காதல்!

ஆசிரியர்
அரங்கண்ணல்
தீட்டும்

அரிய ஓவியம்!
இனிய சொற்கூடு !!

# கேள்வி பதில்

கே: மதுரையில் கழகமே பிளவு பட்டு நிற்பதாகப் பத்திரிகைகளில் பல படச் செய்திகள் வருகின்றனவே, உண்மையா அண்ணு?

பாக்கியம்,
பெரம்பூர்.

ப: கொள்கையின்காரணமாகக் கருத்து வேறுபட்டு நிற்பதற்குத்தான் பிளவு என்று பெயர். மதுரையில் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவது அப்படியல்ல. நிர்வாகம் சம்பந்தமாக ஏற்படும் சாதாரணச் சிக்கலாம். ஒரு விடுதலை இயக்கத்தில் ஓரிருவர் இருக்கும்போது கவலையில்லை. மிகப் பெரிதாக ஆயிரக்கணக்கானவர்கள் சேரும்போது, இப்படிப் பட்ட சிக்கல்கள் ஏற்படவே செய்யும். எல்லோரும் மனிதர்கள்தானே? அப்படிப்பட்ட சிக்கல்களுக்கான அடிப்படையை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்துவிடும்போது, முன்பிருந்ததை விடப் பற்றும் பாசமும் அதிகமாகும். அவ்வகையில் கழகத் தவரும் சகோதரர்கள் போல் பழகி, சாக்கடைகளின் முகத்தில் கரிபூசவே செய்வர்!

* * *

கே: பெரியார் 'விடுதலை'யில் விடுத்துள்ள அறிக்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

வா. மு. நூர்மைதீன்,

கூத்தா நல்லூர்.

ப: திராவிடக் கழகத்தாரைக் காங்கிரசில் சேரச் சொல்லியிருக்கிருரே, அதுபற்றிதானே? ஒரு மாபெரும் அரசியல் வீழ்ச்சி என்று நான்வேதனைப் படுகிறேன்! எந்தக் காங்கிரசை வீழ்த்துவேன் என்று சண்டமாருதமெனச் சீறுவாரோ, அந்தப் பெரியாரின் கரமா இந்த அறிக்கையையும் எழுதியது! ஐயகோ, எதையும் சதமென நம்ப முடியாதுபோலிருக்கிறது, அய்யாவைப் பொறுத்தவரையில்.

* * *

"அறப்போர்', தரும்

## கழக மலர்!

அறிஞர் அண்ணுவின் கருத்தோவியம். பொருளாளர், செயலாளர்கள் கருத்துரை.

* * *

கட்டுரைகள்! கதைகள்!
படங்கள்!

17-9-61
அன்று
கிடைக்கும்.

*

கிரவுன் அளவில் புத்தக வடிவில் 48 பக்கம் | விலை 50 காசு

மாநாட்டு மலர் தேவையான அளவில் தரவில்லை என்று வருந்தும் விற்பனையாளர்கள் மகிழும் வகையில், ஏற்பாடுகள் செய்யப்படும். அஞ்சல் மூலம் பெறும் விற்பனையாளர்கட்கு, பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும். தேவையான மலருக்கு கழிவு 25 சதவீதம் நீக்கி, மீதிப் பணத்தை 8—9—61 க்குள் அனுப்புக. பிறகு வருந்தற்க.

சந்தாதாரர்கள் 50 காசுகள் தபால் தலை அனுப்புக.

'அறப்போர்' சென்னை-24.

கே: தி. மு. க. தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் உடன்பாடு செய்து கொண்டாலும் அது சுதந்திரக்கட்சிக்கு அதாவது முதலாளித்துவக்கட்சிக்குஊக்கம் கொடுப்பதாகாதா?

ச. காந்தி,

கூட்டுறவு
மேற்பார்வையாளர் கழகம்.
தஞ்சை.

ப: ஒரு கட்சிக்கு ஊக்கம், தேர்தல் சமயத்தில் பரசுபர உதவி காரணமாக அளிப்பதால் ஏற்பட்டுவிடாது! உதாரணத்துக்கு கம்யூனிஸ்டு கட்சிக்கு எவ்வளவோ ஊக்கம் அளிக்கப்பட்டது, பெரியார் அவர்களால். இரண்டும் ஒன்ருகி விடுமோ என்கிற அளவுக்கு சேர்ந்து இருந்தனர். இதனுல் கம்யூனிஸ்டுதோழர்கள் பெரியாரின் தலைமையை ஏற்ருே; பெரியாரின் தோழர்கள் கம்யூனிஸ்டுகளோடோ போய்விடவில்லை! அப்போது பெரியார் திராவிட நாடு கேட்டார்கள். ஒத்துழைப்பைப் பெற்றதற்காக கம்யூனிஸ்டுகள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதே போலப் பெரியாரு கம்யூனிஸ்டுகள் வழியே சதமென நம்பிப்போய் விடவில்லை. இரண்டு இயக்கங்களும் பொது எதிரியான காங்கிரசை வீழ்த்த ஒன்று சேர்ந்தன! இதைப்போலப் பொது எதிரியான காங்கிரசை முறியடிக்கத்தான் தேர்தல கால உடன்பாடுகளே ஒழிய, ஒன்ருேடொன்றுகலந்துவிட அல்ல. "அது சரி! பொது எதிரியை வீழ்த்த கம்யூனிஸ்டுகளோடு மட்டும் நாம் ஒத்துழைத்தால் போதாதா?'' என்று கேட்கலாம். அது ஒரு சில இடங்களில் போதுமானதாயிருக்கலாமே ஒழிய, சுதந்திரக்கட்சியின் சார்பில் பொது எதிரியை வீழ்த்தக் கிடைக்கும் ஓட்டுகளை நாம் உதறித் தள்ளியதாகவே அர்த்தமாகும். சுருக்கமான உதாரணம் வேண்டுமானுல், கடந்தஉலகப்போரின் போது கம்யூனிஸ்டு நாடான ரஷ்யா ஏன் முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா-பிரிட்டனுடன் சேர்ந்து போரிட்டது? ஹிட்லர் என்கிற பொது எதிரியை வீழ்த்தத்தானே!!

* * *

கே: எம். ஜி. ஆர் அண்ணு அவர்கள் அரசியலிலிருந்து விரைவில் விலகிவிடுவாரென்று ...ஏடு செய்தி வெளியிட்டு இருக்கிறது உண்மையா?

மு. குமார்,
கர்கி. பூனு-3.

ப: உண்மையில்லாமலிருக்கட்டும் என்றே நானும் எதிர் பார்க்கிறேன்!!

* * *

கே: நாது புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கலைத் துறையை விடுவதா அல்லது அரசியலை விடுவதா என்பதைத்தான் சீக்கிரம் வெளியிடப் போவதாகப் பத்திரிகையில் படித்து வேதனைப் பட்டேன்...

இரா. நாதன்,
மாதானம் பாளையத்தெரு
பிள்ளையார் பாளையம்.

ப: இதுதான் நம்முடையகுடும்ப் பாசம்! இதை அவ்வளவு சுலபத்தில் துண்டிக்க, எவராலும் முடியாது. அதிலும் எம். ஜி. ஆர். அவர்கள் உணர்ச்சி வசப்படுகிறவரல்ல. அவர் எந்த முடிவையும் அண்ணுவைக் கலக்காமல் செய்யமாட்டார். அண்ணு காட்டும் வழியில் நிச்சயம் 'ராஜதந்திரம்' இருக்காமற் போகாது!

* * *

கே: திராவிடப் பொன்னுட்டில், பல புதிய அரசியல் கட்சிகள் ஏற்பட்டிருந்தும் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வெறுக்காதது ஏன்?

கே. மாரிமுத்து,
வரதராஜம்பேட்டை,
சென்னை-24.

ப: சுயநலமும் கண்ணியமற்ற தன்மையும், வெறும் ஆடம்பரமும் வடநாட்டுக்கு வால் பிடிக்கு குணமும் இல்லாததால்!!

* * *

கே: கருங்கடல்— செங்கடல்— மஞ்சள் கடல் என்கிருர்களே, என்ன காரணம்?

வேதமூர்த்தி,
வேதாரண்யம்.

ப: திடீர் திடீரெனப் புயல்களும், கனத்த பனிக்கட்டி மழையும் அடிக்கடி ஏற்படக் கூடியதென்பதால் பயங்கரத்தைக் குறிக்க 'கருங்கடல்' என்று அழைக்கப்படுகிறது. செங்கடலின் அடியில் மிக மிக நுண்ணியமான ஏராளமான சிவப்பு தாவரப் பொருள்கள் உள்ளன. அதனுல் அதன் தோற்றம் சிவப்பாக இருப்பதால் அப்பெயர் பெற்றது. சீனுவில் ஓடும் பல நதிகளுடைய மண் போய் விழுந்து கொண்டிருப்பதால் (சீனுவின் மண், மஞ்சளாகயிருக்கும்) மஞ்சள் நிறத்தோடு விளங்குகிறது. மஞ்சள் கடல்! மத்திய தரைக்கடலின் நிறம் நீலமாகயிருக்கும். இதனுல் கடலே நீல நிறமென்று அர்த்தமல்ல. கையில் எடுத்தால் அந்த நீலம் இருக்க வேண்டுமல்லவா? கடலிலிருக்கும் உப்பில் ஏராளமான பொருள்கள் உள்ளன! ஆவியாக மாறும்போது அந்தப் பொருள்கள் வானத்துக்குப்போய் நீலநிறஆகாயத்தைத் தோன்றச் செய்கின்றன. அது நீரில் தெரிவதால் மத்ய தரைக்கடலும் நீலமாகத் தெரிகிறது.

* * *

கே: சைனுவின் புராதனப் பெயர்...?

(அதே தோழர்)

ப: கதே என்பதாகும்! அப்பெயரில் அங்கு ஆதிக்குடிகள் சிலர் வாழ்ந்தனர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6